# யா/கைதடி நுணாவில்
# அ.த.க.பாடசாலை
# பரிசில் நாள் - 2017

காலம் :- 03.08.2017 வியாழக்கிழமை பி.ப 3.00மணி

இடம் :- "செல்வநாயகதேவி" அரங்கு

தலைவர்
திரு.ஆ.தங்கவேலு அவர்கள்
(பாடசாலை முதல்வர்)

முதன்மை விருந்தினர்
உயர் திரு.சு.கிருஷ்ணகுமார் அவர்கள்
(வலயக்கல்விப்பணிப்பாளர், தென்மராட்சி)

சிறப்பு விருந்தினர்
திரு. வி.சு.துரைராஜா அவர்கள்
(பழைய மாணவர் ஓய்வுநிலை கிராம சேவையாளர், தலைவர், உலத் தமிழ் பண்பாட்டு இயக்கம்)

கௌரவ விருந்தினர்
கலாநிதி வை.சிவராஜா அவர்கள்
(இலங்கை மனித உரிமைகள் அமைப்பு – வடமாகாண ஆளுநர், STC யாழ்ப்பாணம்,கொழும்பு)

திரு.வே.அன்பழகன் அவர்கள்
(ஆசிரியர்,தரம் 5 புலமைப்பரிசில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/கைதடி நுணாவில்
# அ.த.க.பாடசாலை
# பரிசில் நாள் - 2017

**காலம் :- 03.08.2017 வியாழக்கிழமை பி.ப 3.00மணி**

**இடம் :- "செல்வநாயகதேவி" அரங்கு**

**தலைவர்**

**திரு.ஆ.தங்கவேலு அவர்கள்**

(பாடசாலை முதல்வர்)

**முதன்மை விருந்தினர்**

**உயர் திரு.சு.கிருஷ்ணகுமார் அவர்கள்**

(வலயக்கல்விப்பணிப்பாளர், தென்மராட்சி)

**சிறப்பு விருந்தினர்**

**திரு. வி.சு.துரைராஜா அவர்கள்**

(பழைய மாணவர் ஓய்வுநிலை கிராம சேவையாளர், தலைவர், உலத் தமிழ் பண்பாட்டு இயக்கம்)

**கௌரவ விருந்தினர்**

**கலாநிதி வை.சிவராஜா அவர்கள்**

(இலங்கை மனித உரிமைகள் அமைப்பு – வடமாகாண ஆளுநர், STC யாழ்ப்பாணம்,கொழும்பு)

**திரு.வே.அன்பழகன் அவர்கள்**

**(ஆசிரியர்,தரம் 5 புலமைப்பரிசில்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலச்சினை

மகுட வாசகம்

**"ஓதுவது ஒழியேல்"**

## தூர நோக்கு (Vision)

பண்பொடு கல்வியும் கலையும் ஒழுக்கமும்

மிகுந்த நற்சமூகம் உருவாக

## பணிக் கூற்று (Mission)

ஆளுமை ஆரோக்கியம் உயர்ந்து விளங்கிட

கல்வியும் கலாசாரமும் இருகண்களாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக் கீதம்

கைதடி நுணாவில் வித்தியசாலை
சீருடன் வாழியவே
கைதடி நுணாவில் கலங்கரை விளக்காய்
கலையகம் வாழியவே

(கைதடி நுணாவில் )

பத்தொன்பதாம் நூற்றாண்டதில் மலர்ந்து
பலர் மகிழக் கல்வி கலை வளர்த்து
சித்தி தரும் அறிவு வீரம் செல்வம் யாவும்
முத்தென நல்கும் அறிவாலயம் எங்கள்

(கைதடி நுணாவில் )

சமயம் கணிதம் தமிழ் ஆங்கிலம் விஞ்ஞானம்
புவியியல் அழகியல் மனையியல் குடியியல்
விவசாயம் வரலாறு தொழில்நுட்பம் சுகாதாரம்
விளையாட்டிலும் வெற்றி மேம்படச் செய்திடும்

(கைதடி நுணாவில் )

பண்பொடு பழக்கமும் பல நமக்களித்து

அன்பொடு அருளும் ஒழுக்கமும் ஊட்டி

மண்மிசை மக்களின் மதிப்பினைச் சேர்த்திங்கே

இன்புடையோராய் இனிதெமை ஆக்கிடும்

(கைதடி நுணாவில் )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்ச்சி நிரல்

1. மங்கல விளக்கேற்றலும் இறைவணக்கமும்
2. தேசியக் கொடியேற்றல்
3. பாடசாலைக் கொடியேற்றல்
4. வரவேற்பு நடனம்
5. வரவேற்புரை
6. பரிசில் நாள் அறிக்கை
7. பரிசில் வழங்கல்
8. ஆசிரியர் கௌரவிப்பு
9. சாதனை மாணவர் கௌரவிப்பு
10. விருந்தினர் கௌரவிப்பு
11. நூல் வெளியீட்டுரை
12. நூல் வெளியீடு
    - முதற்பிரதி வழங்கல்
    - சிறப்புப் பிரதிகள் வழங்கல்
13. விருந்தினர் உரை
14. கலை நிகழ்வுகள்
15. ஏற்புரை(இதழ் ஆசிரியர்)
16. நன்றி உரை
17. கொடியிறக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/கைதடி நுணாவில் அ.த.க பாடசாலை

## பரிசில் நாள் அறிக்கை

எமது பாடசாலையின் இன்றைய பரிசில் நாள் நிகழ்விற்கும், நூல் வெளியீட்டிற்கும் எமது அழைப்பை ஏற்று முதன்மை விருந்தினராக வருகை தந்திருக்கும் பேரன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய தென்மராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர் உயர். திரு.சு. கிருஷ்ணகுமார் அவர்களே!, இந்நிழ்வின் சிறப்புவிருந்தினராக கலந்து சிறப்பிக்கும் ஓய்வுநிலை கிராம அலுவலரும் இப்பாடசாலையின் பழைய மாணவருமாகிய திரு.V.S துரைராஜா அவர்களே!

கௌரவ விருந்தினர்களாக கலந்து சிறப்பிக்கும் கலாநிதி வை.சிவராஜா அவர்களே!, மற்றும் தரம் 5 புலமைப்பரிசில் ஆசிரியர் திரு.வே.அன்பழகன் அவர்களே! நூல் வெளியீட்டுரை நிகழ்த்துவதற்காக எமது அழைப்பை ஏற்று வருகை தந்திருக்கும் யா / கோப்பாய் ஆசிரியர் கலாசாலை பிரதி அதிபர் திரு.ச.லலீசன் அவர்களே!

முதற்பிரதிகள் பெற்றுக்கொள்ள வந்திருக்கும் பழையமாணவர்கள் திரு. வே.சுபாஸ்கரன், திரு. மு.அகிலகுமாரன் , திரு.ம.மகேந்திரலிங்கம் அவர்களே!

மற்றும் பிரதிக்கல்விப் பணிப்பாளர்களே, கோட்டக்கல்விப் பணிப்பாளர் அவர்களே உதவிக்கல்விப் பணிப்பாளர்களே, ஆசிரிய ஆலோசகர்களே,ஓய்வுநிலைப் பிரதிக்கல்விப் பணிப்பாளர்களே ஓய்வுநிலை அதிபர்களே, ஆசிரியர்களே

அயற் பாடசாலைகளின் அதிபர்களே, ஆசிரியர்களே, எமதுபாடசாலை ஆசிரியர்களே, மாணவச்செல்வங்களே, பெற்றோர்களே, பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களே, பழையமாணவர் சங்க உறுப்பினர்களே, நலன்விரும்பிகளே, கிராம அலுவலர்களே, மற்றும் இந்நிகழ்வில் சிறப்புப் பிரதிகள் பெற்றுக்கொள்ள வருகை தந்திருக்கும் பழைய மாணவர்களே பெற்றோர்களே உங்கள் அனைவரையும் வருக! வருக வென வரவேற்பதில் பெருமகிழ் வடைகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முதன்மை விருந்தினர் அவர்களே!**

இன்றைய நாளில் முதன்மைவிருந்தினராக வருகைதந்திருக்கும் தாங்கள் எமது கல்விவலயத்தை 2013ல் பொறுப்பேற்ற காலம் முதல் இவ்வலயம் கல்வி, கலாச்சாரம், இணைபாடவிதானம் என பல்துறைகளிலும் முதன்நிலை வலயமாகக் கொண்டு வருவதற்கு அயராது உழைத்துள்ளீர்கள். இன்னும் ஐந்து வாரங்களில் ஓய்வுபெறவிருக்கும் தாங்கள் இவ்வலயத்தின் வளர்ச்சிகருதி உருவாக்கிய திட்டங்கள் யாவும் தொடர்ந்தும் முன்கொண்டு செல்வதே தென்மராட்சி கல்விச்சமூகம் தங்களிற்குச் செய்யும் நன்றிக்கடனாகும். அந்தவகையில் தங்கள் ஓய்வுக்காலம் சிறக்க வாழ்த்துவதோடு இன்றைய நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலந்து சிறப்பித்தமையை இட்டு எமது பாடசாசைச் சமூகம் பெருமகிழ்வடைகின்றது.

**சிறப்பு விருந்தினர் அவர்களே!**

இன்றைய நிகழ்விற்கு எமது அழைப்பை ஏற்று வருகை தந்திருக்கும் தாங்கள் எமது வித்தியாலயத்தின் பழைய மாணவராக இருப்பதுடன் இப்பகுதியில் சிறப்பான கிராமசேவையாளராகவும் இருந்து ஓய்வுபெற்றுள்ளீர்கள். புலம்பெயர் தேசத்தில் வசித்தாலும் எங்கள் தமிழ்மொழிக்காக, தமிழை அழியாமல் காக்க வேண்டுமெனும் பெருவிருப்பங் கொண்டு உலகத்தமிழ்ப்பண்பாட்டு இயக்கத்தின் தலைமைப்பொறுப்பை ஏற்று சீரியபணி செய்து வரும் தாங்கள் எமதுபாடசாலை வளர்ச்சிக்காகவும் அரும்பாடுபட்டுக் கொண்டிருக்கிறீர்கள் இன்றைய நாளில் 69வது அகவையை நிறைவுசெய்யும் தாங்கள் தங்களது தமிழ்ப்பணி சிறக்க வாழ்த்தி இன்றைய நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பித்மையையிட்டு பாடசாலைச் சமூகத்தினராகிய நாம் பெருமையடைகின்றோம்.

**கௌரவவிருந்தினரகள்**

கலாநிதி. வை.சிவராஜா அவர்களே! இலங்கை மனித உரிமைகள் காப்பகத்தின் வடமாகாண ஆளுனராகவிருந்து பல்வேறு சமய, சமூகப்பணிகளை முன்னெடுத்து வரும் தாங்கள் எமதுபாடசாலையின் தேவையுணர்ந்து நாங்கள் கேட்காமலே கடந்த ஆண்டில் மாணவர்களது தளபாடங்களைச் செப்பனிட்டு வர்ணம் தீட்டித்தந்ததுடன் பாடசாலைக் கவின் நிலைக்காக பல்வேறு உதவிகளைச்செய்திருந்தீர்கள் அத்துடன் இவ்வாண்டு மாணவர்களது 3நாள் கல்விச்சுற்றுலாவிற்கான போக்குவரத்து மற்றும் உணவிற்கான அனுசரணைகளை தாங்கள் வழங்கி எமதுமாணவர்கள் இலங்கையின் பிற இடங்களைப் பார்வையிடச்சந்தர்ப்பம் வழங்கியமைக்காக நாம் நன்றி பாராட்டுகின்றோம்.

அத்துடன் அடிக்கடி எம்மோடு தொலைபேசியில் உரையாடி பாடசாலையின் செயற்பாடுகள் பற்றி வினாவுவதுடன் உதவிதேவைப்படின் தாம் செய்து தருவதாகவும் கூறுவது எம்மை உற்சாகமாக எம்பணியைத்தொடரவைக்கிறது. எனவே இந்தவகையில் இன்றைய பரிசில் நாளுக்கு தாங்கள் கௌரவ விருந்தினராக கலந்து சிறப்ப்பித்தமையையிட்டு எமதுபாடசாலைச் சமூகம் பேருவகை கொள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரவ விருந்தினர் திரு.வே.அன்பழகன் அவர்களே தாங்கள் இப்பிரதேசத்தைச் சேர்ந்தவராக இருந்து தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்களுக்குச் செய்யும் பணி மகத்தானது. தங்களின் தேவையையுணர்ந்த யாழ்ப்பாணக் கல்விச் சமூகம் எங்களிடமிருந்து தங்களை தூக்கிக் கொண்டு சென்றதேனோ! அங்கு சென்றாலும் தென்மராட்சி பிறந்த மண்ணில் சேவை செய்யவேண்டும் என்று பெருவிருப்பம் கொண்ட தாங்கள் வாரத்தில் இருநாட்கள் இங்கு வந்து மாணவர்களுக்கு கல்வி ஊட்டத் தவறுவதில்லை. அந்த வகையில் எமது ஆரம்பக் கல்வியின் அனைத்துத் தரங்களிற்கும் தங்களது இலகுவழி வினாப்பத்திரங்களைத் தந்து இப்பாடசாலை மாணவர்களின் கல்வித்தர வளர்ச்சியில் பெரிதும் பங்காற்றுகின்றீர்கள். தங்களது இன்றைய வருகை எமக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. இவ்வாறான நெருக்கடியான காலத்திலும் ஒருதடவைக்குப் பலமுறை சிந்தித்து இங்கு வருவதற்குச் சம்மதம் தெரிவித்தீர்கள். தங்களுக்கு எமது மனம் நிறைந்த நன்றிகள்.

நூல் வெளியீட்டுரையை நிகழ்த்த வருகை தந்திருக்கும் எனது நண்பரும் கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் பிரதி அதிபருமான தாங்கள் இப்பிரதேசத்தைச் சேர்ந்தவரே தங்களது இனிமையான குரலால் "நுணசை ஆரம்" நூலுக்கு வெளியீட்டுரை நிகழ்த்த வந்த தங்களை எமது பாடசாலையைச் சமூகம் என்றென்றும் நன்றியுடன் நினைவில் நிறுத்திக் கொள்ளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| அதிபர் | 01 |
| பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் | 06 |
| கலைப்பட்டதாரி | 10 |
| தேசிய கல்வி டிப்ளோமா | 02 |
| பகுதிநேர ஆசிரியர் | 01 |
| இணைப்பிலுள்ள ஆசிரியர் | 01 |
| கல்வி சாரா ஊழியர் | 01 |

# பாடசாலை ஆளணி விபரம்

# பரீட்சைப் பெறுபேறு

## தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறு

| ஆண்டு | தோற்றியோர் தொகை | சித்தி பெற்றோர் தொகை |
|---|---|---|
| 2014 | 13 | 03 |
| 2015 | 13 | 03 |
| 2016 | 12 | 03 |

## க.பொ.த.(சா/த)ப் பெறுபேறு

| ஆண்டு | தோற்றியோர் தொகை | சித்தி பெற்றோர் தொகை |
|---|---|---|
| 2014 | 11 | 06 |
| 2015 | 11 | 08 |
| 2016 | 08 | 04 |

## மாணவர் விபரம்

| பிரிவு | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| ஆரம்பப் பிரிவு | 31 | 33 | 64 |
| இடைநிலைப் பிரிவு | 32 | 33 | 65 |
| மொத்தம் | 63 | 66 | 129 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி அபிவிருத்தி

எமது பாடசாலையின் கல்வி அபிவிருத்தியைக் கருத்தாகக் கொண்டு அயராது செயற்பட்டு வரும் ஆசிரியப் பெருந்தகைகள் பாராட்டுக்குரியவர்கள். அவர்களது தன்னலமற்ற சேவையினால் எமது மாணவர்களின் கல்வித் தரம் சிறப்பாக உள்ளது.

கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்காக 2013 ஆம் ஆண்டு தொடக்கம் Home Work club செயற்திட்டத்தின் மூலம் கற்றலில் பின்னடைவான மாணவர்களுக்கான மேலதிக பயிற்சி வகுப்புக்கள் இப்பிரதேச ஆசிரியர்களின் கற்பித்தல் மூலம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. அத்துடன் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த சாதாரண தர மாணவர்களிற்கான மேலதிக பயிற்சி வகுப்புக்கள், பயிற்சிப்பரீட்சைகள், அடைவு மட்டம் குறைந்தவர்களுக்கான மேம்படுத்தல் செயற்பாடுகள் என்பன திட்டமிட்டபடி ஒழுங்காக நடைபெற்று வருகின்றது.

மேலும் 2016 இல் நடைபெற்ற தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் 12 மாணவர்கள் தோற்றி 03 மாணவர்கள் சித்திபெற்றதுடன் 08 மாணவர்கள் 70 புள்ளிகளிற்கு மேல் பெற்றுள்ளமை பாராட்டிற்குரியது. ந.பிரியங்கன் 172 புள்ளிகள் ச.ஜிஸ்னுகா 152 புள்ளிகள், பி.கோபிராம் 156 புள்ளிகள் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இத்துடன் 2016 இல் நடைபெற்ற க.பொ.த சா.தர பரீட்சைக்கு 08 மாணவர்கள் தோற்றி 04 மாணவர்கள் க.பொ.த உயர்தரத்திற்கு தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணைபாட விதானம்

எமது பாடசாலை மாணவர்கள் கற்றலில் மட்டுமன்றி கற்றலுடன் தொடர்புடைய ஏனைய போட்டிகளிலும் வெற்றியீட்டும் வகையில் பயிற்சியளிக்கப்பட்டு ஊக்குவிக்கப்படுகின்றனர். 2017 தமிழ்த்தினப் போட்டியில் பிரிவு ஒன்றில் செல்வி.ச.அபிஸ்நயா கட்டுரை வரைதலில் வலயமட்டத்தில் 1ம் இடத்தையும், மாகாணமட்டத்தில் 2ம் இடத்தையும் பெற்றுள்ளார்.அத்துடன் ஆங்கில தினப்போட்டியில் பாஓதலில் வலய மட்டத்தில் 1ம் இடம் பெற்று மாகாணமட்டப் போட்டிக்கு தெரிவாகியுள்ளார். ஆங்கில உறுப்பெழுத்துப் போட்டியில செல்வி. ச.அபிஸ்நயா 3ம் இடத்தையும் பெற்றார். அவ்வாறே வலயமட்டக் கணித உபகரணப் போட்டியில் தரம் 8 மாணவி செல்வி.அ.அபினா 1ம் இடம் பெற்றுள்ளார். கற்றல் வளநிலையப்போட்டி என்பவற்றிலும் மாணவர்கள் பங்குபற்றி வெற்றியீட்டியுள்ளனர்.

ஆரம்பபிரிவு செயற்பட்டு மகிழ்வோம் போட்டியில் ஆண் பெண் கலப்புப் பிரிவில் 3 அணிகள் பங்குபற்றின. இதில் தரம் 3 அணி வலயமட்டத்தில் 2ம் இடம் பெற்றுள்ளமை பாராட்டிற்குரியது. வலய மட்டI.C.T Quiz போட்டியில் தரம்5 ஐச்சேர்ந்த ச.அபிஸ்நயா 2ம் இடத்தையும் ம.அக்சயன் 3ம் இடத்தையும் பெற்றுள்ளனர். துரித கணிதப்போட்டியில் தரம் 5 ம.அக்சயன் 3ம் இடத்தைப் பெற்றுள்ளார்.மறுமலர்ச்சி மன்றம் நடாத்திய ஆங்கில உச்சரிப்புப் போட்டியில் வலயமட்டத்தில் தரம் 5ல் செ.பௌசிகா,ம.அக்சயன் தரம் 2ல் ந.டிகாஸ், த.கஜான்சி ஆகியோர் சிறப்புத் தேர்ச்சிகளையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. சமயபாட கோலம் போடுதல் போட்டியில் தரம் 6 மா.ஜெனுசியன் 3ம் இடத்தையும் தரம் 9 பா.பர்சனா தேர்ச்சியையும் பெற்றுள்ளார்.சமய புராண படலமோதற் போட்டியில் தரம் 10 மாணவி மா.மகிழினி, ச.சுசோஜனா தேர்ச்சியையும் பெற்றுள்ளனர். எமது பாடசாலை ஆசிரியர் திருமதி.ஜெ.பரஞ்சோதி அவர்கள் தரம் 7 சமயபாட வலயமட்ட உபகரணக் கண்காட்சியில் 1ம் இடத்தைப் பெற்றுள்ளார்.

மெய்வல்லுனர் விளையாட்டுக்களில் வலயமட்டத்தில் தலா 3 முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்கள் கிடைக்கப்பெற்று வலயமட்டத்தில் புள்ளி அடிப்படையில் முதல் பத்து இடங்களுக்குள் எமது பாடசாலையும் தெரிவுசெய்யப்பட்டது.16 வயதுப் பிரிவில் நீளம் பாய்தலில் ர.மகிந்தன் 1ம் இடத்தையும், உயரம் பாய்தலில்1ம் இடத்தையும், 200mல் 2ம் இடத்தையும், சோ.அபிசன் ஈட்டி எறிதலில் 3ம் இடத்தையும்,பா.சிந்துஜா நீளம் பாய்தலில் 3ம் இடத்தையும், 100mல் 2ம் இடத்தையும்,18 வயதுப் பிரிவில் 1500m ல் ம.ஜெகதேதீஸ் 3ம் இடத்தையும், சட்டவேலி பாய்தலில் தி.அஜிந்தன் 2ம் இடத்தையும் ,12 வயதுப் பிரிவில் நீளம் பாய்தலில் மா.ஜெனுசியன் 1ம் இடத்தையும் பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து நடைபெற்ற மாகாணமட்டப் போட்டியில் 16 வயதுப் பிரிவில் செல்வன்.ர.மகிந்தன் நீளம் பாய்தல், உயரம் பாய்தல் நிகழ்வுகளில் 1ம் இடம் பெற்று தங்கப்பதக்கத்தை வென்றுள்ளார். அத்துடன் 16 வயதுப்பிரிவில் கள நிகழ்ச்சிகளில் சிறந்த வீரருக்கான கிண்ணத்தையும் வென்றுள்ளார். இவ்விரு நிகழ்வுகளிலும் மாகாணமட்டத்தில் கடந்த ஆண்டின் மாகாண சாதனையை முறிகியடித்தமை குறிப்பிடத்தக்கது. யாழ்மாவட்ட மெய்வல்லுனர் சங்கம் நடாத்திய தடகளப் போட்டியில் செல்வன். ர.மகிந்தன், செல்வன்.ம.ஜெனுசின் இருவரும் நீளம் பாய்தலில் 1ம் இடம் பெற்று சான்றிதழ்கள் பெற்றுள்ளனர்.

அத்துடன் எமது பாடசாலை கற்றல் வளநிலையம் மிகக்குறுகிய இடத்தில் மிகச் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றது. வலயமட்டக் கற்றல் வளநிலையப்போட்டியில்

2014 -3ஆம் இடம்

2015 -3ஆம் இடம்

2016 -2ஆம் இடத்தையும் பெற்றுள்ளமை பாராட்டுதற்குரியதாகும்.

வலயமட்டப் பாடசாலைத் தோட்டப்போட்டியில் எமது பாடசாலை

2016 -1ஆம் இடம்

2017 -2ஆம் இடத்தையும் பெற்று வெற்றிபெற்றுள்ளமை பாராட்டிற்குரியதாகும். நன்னீரின்றி போதிய நிலமின்றி பெற்ற வெற்றி இதுவாகும்.

## மன்றங்கள் ,கழகங்கள்

மாணவர்களின் பல்வேறு ஆற்றல்களையும் வளர்த்தெடுக்கும் வகையில் மாணவர்களது கல்விச் செயற்பாட்டிற்கு மேலதிமாக அவர்களது அறிவு, திறன் ஏனைய தலைமைத்துவப் பண்புகளை வளர்க்க மன்றங்கள் துணைபுரிகின்றன. ஆரம்ப பிரிவு மன்றம், இந்து மன்றம், தமிழ் இலக்கிய மன்றம், ஆங்கில மன்றம், சமூக விஞ்ஞான மன்றம், சுகாதார மன்றம், கணித விஞ்ஞான மன்றம் ஆகிய மன்றங்களும் சக்தி வளக்கழகம், சுற்றாடல் முன்னோடிக் கழகங்களும் சிறப்பாக இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை அபிவிருத்திக்குழு, பழைய மாணவர் சங்கம் மற்றும் நலன்விரும்பிகளின் ஒத்துழைப்புக்கள்

பாடசாலையின் கல்வி வளர்ச்சியிலும், பௌதீகவள விருத்தியிலும் மேற்படி அமைப்புக்களின் ஒத்துழைப்பு முக்கிய பங்கு வகிக்கின்றது.

திரு.P.றுஜாந்த் ஊடாக 4 மாணவர்களுக்கு கல்விக்கான மாதாந்த நிதி வழங்கப்படுகிறது. பாடசாலையின் பழைய மாணவர் கு.கங்கேஸ்வரன்[லண்டன் ] தாயார் ஞாபகார்த்தமாக சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் பெறும் இயந்திரமொன்றை 100 000% செலவில் அமைத்துள்ளார். பிரபல தொழிலதிபரும் மனித உரிமைகள் அமைப்பின் வடமாகாண ஆளுனரும் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற செயலாளருமான கலாநிதி.வை.சிவராஜா அவர்கள் இவ்வாண்டு எமது மாணவர்கள் கல்விச் சுற்றுலா செல்வதற்காக போக்குவரத்து மற்றும் உணவிற்கான அனுசரணையை வழங்கியிருந்தார். அவருக்கு எமது மனம் நிறைந்த நன்றிகள்.எமது பாடசாலையின் வளர்ச்சிக்காக திரு.க.கஜேந்திரன் 10 000/= ஐயும் திரு.k.விதர்ராஜ் 3மடிக் கணனிகளையும்10 000/= ஐயும் திரு.சி.வீரகத்தி ஓய்வு பெற்ற அதிபர் அவர்கள் 10 000/= ஐயும் திரு.V.S.துரைராஜா அவர்கள் Printer ஒன்றையும் வழங்கியுள்ளனர்.கௌரவ பாராளமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் 2017 பன்முகபடுத்தப்பட்ட வரவு செலவு நிதியில் இருந்து Multi media ஒன்றையும் வழங்கியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக்கு கிடைக்கும் உதவிகள் 2017

| இல | உதவுபவர் | நிதி | பயனாளிகள் |
|---|---|---|---|
| 01 | கனடாவாழ் மட்டுவில் நலன்புரிச் சங்கம் | 5000.00<br>5000.00<br>5000.00<br>5000.00 | ஜீ.டல்சிகா<br>து.சயிந்தா<br>பா.மதுசன்<br>ச.சரண்ஜன் |
| 02 | கைத்தொழில் வணிகர் மன்றம் - சாவகச்சேரி | 6000.00<br>6000.00<br>6000.00<br>6000.00 | க.நிவேதன்<br>நி.றதீபா<br>இ.ராகவன்<br>பா.கிருஸ்வின் |
| 03 | ஆலமரம் சுவிஸ் கொடையாளிகள் | 6000.00<br>6000.00 | பா.மதுமிதா<br>ச.சுலோஜனா |
| 04 | சிறுவர் நிதியம் | 9000.00 | பா.சிந்துஜா |
| 05 | சாள்ஸ் ஜீவராஜ் | 40000.00 | ச.சுலோஜனா<br>நி.றதீபா<br>உ.கென்சிகா<br>ஸ்.வினுஜா |
| 06 | க.விதர்ராஜ் | 3மடிக் கணினி<br>10000.00 | மாணவர்கள் |
| 07 | சி.வீரகத்தி ஓய்வு நிலைஅதிபர் | 10000.00 | விஞ்ஞான அறைத்தளபாடம் |
| 08 | கார்த்திகேசு அறக்கொடை நிதியம் சங்கத்தானை சாவகச்சேரி | 53000.00 | 74மாணவர்களுக்கு சப்பாத்து |
| 09 | திரு.க. கஜேந்திரன் | 10000.00 | மாணவர்கள் |
| 10 | திரு.V.S.துரைராஜா | 1 Printer | மாணவர்கள் |
| 11 | கௌரவ பாராளமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் | 1 Multi media | மாணவர்கள் |
| 12 | கலாநிதி.வை.சிவராஜா | கல்விச்சுற்றுலாவிற்கான போக்குவரத்து மற்றும் உணவு | மாணவர்கள் |
| 13 | திரு.க.க.ஆனந்தமணி (ஓய்வுபெற்ற ஆசிரியர்) | மின்விறிக்காக<br>18000.00 | மாணவர்கள் |
| 14 | திரு.ஜெயக்குமார் (பெற்றோர்) | மின்விசிறி-1 | மாணவர்கள் |
| 15 | திரு.பாஸ்கரன் (பெற்றோர்) | மின்விசிறி-1 | மாணவர்கள் |
| 16 | திருமதி.சுஜாத்தா சிவனேசன் | வருடாந்த கல்வி அபிவிருத்தி நிதி<br>10000.00 | மாணவர்கள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஆசிரியர் விபரம் 2017 | | |
|---|---|---|
| இல | ஆசிரியர் பெயர் | கல்வித் தகைமை<br>தொழிற்தகைமை |
| 1 | திரு.ஆறுமுகம் தங்கவேலு | கல்விமாணி<br>SLPS2.II |
| 2 | திருமதி.சிவமலர்.நாகலிங்கம் | சிறப்பு கலைமாணி<br>பட்டப்பின் கல்வி டிப்ளோமா |
| 3 | திருமதி.சிவகுமாரி செல்வரத்தினம் | க.பொ.த உயர் தரம்<br>விசேட பயிற்சி வர்த்தகம் |
| 4 | திருமதி.ஜெயந்தி பரம்சோதி | கல்விமாணி<br>விசேட பயிற்சி ஆரம்பக் கல்வி |
| 5 | திருமதி.பவநீதராணி.விக்னேஸ்வரன் | க.பொ.த உயர் தரம்<br>விசேட பயிற்சி ஆரம்பக் கலவி |
| 6 | திருமதி.குணமதி.சிவநாதன் | விசேட பயிற்சி தமிழ் கலைப்பட்டதாரி<br>பட்டப்பின் கல்வி டிப்ளோமா |
| 7 | திருமதி.யோகேஸ்வரிசிவனாந்தம் | நுண்கலைப்பட்டதாரி<br>பட்டப்பின் கல்வி டிப்ளோமா |
| 8 | திருமதி.நளினிகலா தவராசா | க.பொ.த உயர்தரம்<br>விசேட பயிற்சி மனையியல் |
| 9 | திருமதி.மகிந்தினி.சுகந்தன் | கற்பித்தலில் தேசிய டிப்ளோமா<br>கலைப்பட்டதாரி<br>பட்டப்பின் கல்வி டிப்ளோமா |
| 10 | திருமதி.சந்திரலதா நிமலரங்கன் | க.பொ.த உயர் தரம்<br>தேசிய கல்வி கணித டிப்ளோமா |
| 11 | திருமதி.நந்தினி.சர்மிலன். | கற்பித்தலில் தேசிய டிப்ளோமா,<br>கலைப்பட்டதாரி |
| 12 | திருமதி.ஜெயந்தி விநாயகமூர்த்தி | கலைப்பட்டதாரி<br>பட்டப்பின் கல்வி டிப்ளோமா |
| 13 | திரு.தாமோதரம்பிள்ளை.தேவேஸ்வரன் | க.பொ.த உயர்தரம்<br>விசேட பயிற்சி விவசாயம் |
| 14 | செல்வி.வைரமுத்து.ஞானகௌரி | க.பொ.த உயர்தரம்<br>விசேட பயிற்சி ஆரம்பக்கல்வி |
| 15 | திருமதி.அனோசியா.முரளீதரன் | கலைப்பட்டதாரி<br>பட்டப்பின் கல்வி டிப்ளோமா |
| 16 | திருமதி.தவமலர்.பஞ்சலிங்கம் | கலைப்பட்டதாரி<br>விசேட பயிற்சி ஆங்கிலம் |
| 17 | திருமதி.கயல்விழி.உதயசந்தர் | சிறப்பு கலைமாணி<br>பட்டப்பின் கல்வி<br>டிப்ளோமா,முதுகல்வியியல்மாணி |
| 18 | திரு.சிவபுண்ணியம் சிவகரன் | க.பொ.த உயர்தரம்<br>தேசிய ஆரம்பக்கல்வி டிப்ளோமா |
| 19. | திருமதி.செல்வநிதி.தனபாலசிங்கம் | க.பொ.த உயர் தரம்<br>விசேட பயிற்சி ஆரம்பக் கலவி |
| 20. | திருமதி.கலைமகள்.சியாம்சுந்தர் | கலைப்பட்டதாரி<br>விசேட பயிற்சி வர்த்தகம் |

## கல்வி சாரா ஊழியர்

| | |
|---|---|
| 01 | திரு க.சுதாகரன் |

## இடம் மாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர் - 2017

| | |
|---|---|
| 01 | திருமதி. த.தெய்வேந்திரம் ( SLTS 2 -1 ) |

## இடம் மாற்றம் பெற்றுச் சென்ற கலவிசாரா ஊழியர் - 2017

| | |
|---|---|
| 01 | திரு. ந.கஜீவன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிகள்

இன்றைய பரிசில் நாள் நிகழ்வு சிறக்க மாணவர்களுக்கான பரிசுப்பொருட்களை வழங்கி உதவிய எமது பாடசாலையின் பழைய மாணவர்களும் பிரபல தொழிலதிபருமான **திரு.திருமதி சுபாஸ்கரன் அனுசியா** குடும்பத்தினருக்கு எமது மனமார்ந்த நன்றிகள்.

அவ்வாறே இன்றைய பரிசில் நாள், நூல் வெளியீடு நிகழ்வுகளில் பல்வேறு தேவைகளுக்கும் நிதியுதவியை வழங்கியோர், ஒலியமைப்பினை வழங்கிய பழைய மாணவர்கள், பந்தல் சேவையினருக்கும் மற்றும் பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவருக்கும் எமது உளம்நிறைந்த நன்றிகள்.

இன்றைய பரிசில் நாள் நிகழ்விற்கு எமது அன்பான அழைப்பை ஏற்று எத்தனையோ சிரமங்களின் மத்தியிலும் வருகை தந்து விழாவைச் சிறப்பித்துக் கொண்டிருக்கும் விருந்தினர்கள், வலயக் கல்வி அலுவர்கள், உத்தியோகத்தர்கள், தென்மராட்சிப் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், ஓய்வு பெற்ற அதிபர்கள், ஆசிரியர்கள், இடமாற்றம் பெற்றுச்சென்ற ஆசிரியர்கள், எமது பிரதேச வைத்தியர், முன்பள்ளிகளிகளின் ஆசிரியர்கள், சனசமூக நிலைய உறுப்பினர்கள் ,பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் பழைய மபணவர்கள், நலன் விரும்பிகள், பெற்றோர், எமதுபாடசாலை ஆசிரியர்கள் , மாணவச் செல்வங்கள், கல்விசாரா ஊழியர்கள் உங்கள் அனைவருக்கும் இந்த நன்நாளிலே பாடசாலைச் சமூகம் சார்பாக எனது மனமார்ந்த நன்றிகள்.

நன்றி

வணக்கம்

**திரு.ஆ.தங்கவேலு**

அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசுபெறுவோர் விபரம் -2017

**தரம் 1. - 2017**

| தொடர் இல | மாணவர்பெயர் | பரிசு விபரம் |
|---|---|---|
| 1 | ந.ரஜிதரன் | பொதுத்தேர்ச்சி |
| 2 | ஜீ.லபிசாந் | பொதுத்தேர்ச்சி, நூலகம் - கதைகூறல் |
| 3 | ச.சானுஜன் | பொதுத்தேர்ச்சி, நூலகம் - கதைகூறல் |
| 4 | தா.தன்ஷிகன் | பொதுத்தேர்ச்சி |
| 5 | ஜெ.கவிப்பிரியா | பொதுத்தேர்ச்சி |
| 6 | அ.அக்சயா | பொதுத்தேர்ச்சி |
| 7 | ச.சரணியா | பொதுத்தேர்ச்சி |
| 8 | ச.கம்சிகா | பொதுத்தேர்ச்சி |
| 9 | சி.நிசானா | பொதுத்தேர்ச்சி |
| 10 | ர.அனுஜா | பொதுத்தேர்ச்சி |
| 11 | கி.பிரேன்சியா | பொதுத்தேர்ச்சி |

**தரம் 1 -2016**

| | | |
|---|---|---|
| 01 | சி.ஸோபிதன் | பொதுத்தேர்ச்சி நூலகம் - சித்திரம் |
| 02 | ந.டிகாஸ் | பொதுத்தேர்ச்சி நூலகம் - சித்திரம் |
| 03 | ஶ்ரீ.நிதுன்ஜன் | பொதுத்தேர்ச்சி |
| 04 | ஸ்.சபிக்ஷன் | பொதுத்தேர்ச்சி |
| 05 | சி.அக்சயா | பொதுத்தேர்ச்சி |
| 06 | இ.அருஸ்ரிகா | பொதுத்தேர்ச்சி |
| 07 | கா.கம்சிகா | பொதுத்தேர்ச்சி |
| 08 | த.கஜான்சி | பொதுத்தேர்ச்சி நூலகம் - கதைகூறல் |
| 09 | வி.கம்சிகா | பொதுத்தேர்ச்சி |
| 10 | இ.டன்சியா | பொதுத்தேர்ச்சி |
| 11 | நி.நிலானி | பொதுத்தேர்ச்சி நூலகம் - சித்திரம் |
| | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் 2

| தொடர் இல | மாணவர்பெயர் | பரிசு விபரம் |
|---|---|---|
| 1 | செ.பத்மஜன் | பொதுத்தேர்ச்சி |
| 2 | கு.நிசோன் | பொதுத்தேர்ச்சி நூலகம் - கதைகூறல் |
| 3 | பி.பிரதீப் | பொதுத்தேர்ச்சி |
| 4 | ச.ஹஸ்மிதன் | பொதுத்தேர்ச்சி நூலகம் - கதைகூறல |
| 5 | அ.அபிசன் | பொதுத்தேர்ச்சி |
| 6 | நி.கிசான் | பொதுத்தேர்ச்சி |
| 7 | த.கபில்ராஜ் | பொதுத்தேர்ச்சி |
| 8 | ர.மேரி ஜெறின்சனா | பொதுத்தேர்ச்சி |
| 9 | செ.செங்கயல் | பொதுத்தேர்ச்சி,சாந்தையர் மடம்,சமயம் சிறப்புத் தேர்ச்சி |
| 10 | ஜெ.திபிசா | பொதுத்தேர்ச்சி நூலகம் - சித்திரம் |
| 11 | ஜெ.குகப்பிரியா | பொதுத்தேர்ச்சி நூலகம் - சித்திரம்,வலயமட்டம் சித்திரம் சிறப்புத் தேர்ச்சி, சாந்தையர் மடம்,சமயம் சிறப்புத் தேர்ச்சி |

**தரம் 3**

| | | |
|---|---|---|
| 01 | இ.டிசான் | இணைபாடம் |
| 02 | வி.விஸ்ணு | சுற்றாடல் |
| 03 | அ.தேவப்பிரியன் | சுற்றாடல் |
| 04 | பா.கிருஸ்வீன் | தமிழ்,கணிதம்,சுற்றாடல்,ஆங்கிலம்,சமயம் |
| 05 | து.ரஜிசன் | தமிழ்,கணிதம்,சுற்றாடல்,ஆங்கிலம்,சமயம் |
| 06 | சி.அபிசேக் | தமிழ்,ஆங்கிலம்,சமயம் |
| 07 | சி.புவின்சன் | தமிழ்,கணிதம்,சுற்றாடல்,ஆங்கிலம்,சமயம்,நூலகம்-கதைகூறல் |
| 08 | நா.சங்கர்ராஜ் | தமிழ்,கணிதம்,சுற்றாடல்,சமயம் |
| 09 | வி.பிரவணன் | தமிழ்,கணிதம்,சுற்றாடல்,ஆங்கிலம்,சமயம்,நூலகம்-சித்திரம்,வலய மட்டம் துரித கணிதம்,சித்திரம் சாந்தையர் மடம் சமயம்-சிறப்புத் தேர்ச்சி |
| 10 | சு.பாவினியன் | தமிழ்,கணிதம்,சுற்றாடல்,ஆங்கிலம்,சமயம் |
| 11 | யோ.கிறித்திக்றொஷான் | இணைபாடம் |
| 12 | ற.திஷானன் | இணைபாடம் |
| 13 | சு.சந்தோசனா | தமிழ்,கணிதம்,சுற்றாடல்,ஆங்கிலம்,சமயம்,நூலகம்-வாசிப்பு |
| 14 | த.திலக்சனா | தமிழ்,சுற்றாடல்,ஆங்கிலம்,சமயம்,நூலகம்-வாசிப்பு |
| 15 | நா.மாதங்கி | இணைபாடம் |
| 16 | இ.மானுசா | இணைபாடம் |
| 17 | பா.கேஷிகா | தமிழ்,சுற்றாடல்,ஆங்கிலம்,சமயம்,நூலகம்-வாசிப்பு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தரம் 4**

| | | |
|---|---|---|
| 1 | ம.அக்சயன் | தமிழ் , சமயம் , கணிதம் , சுற்றாடல், ஆங்கிலம்,நூலகம்-வாசிப்பு,சாந்தையர் மடம்-சமயம்- சிறப்புத் தேர்ச்சி |
| 2 | கா.மி[illegible]ஜன் | தமிழ் , சமயம் , கணிதம் , சுற்றாடல், ஆங்கிலம்,நூலகம்-வாசிப்பு |
| 3 | ப.அக்சயன் | தமிழ் , சமயம் , கணிதம் , சுற்றாடல்,ஆங்கிலம் |
| 4 | இ.கிருத்திகன் | தமிழ் , சமயம் , கணிதம் , சுற்றாடல், ஆங்கிலம்,நூலகம்-வாசிப்பு |
| 5 | செ.வர்ணிகா | தமிழ் , சமயம் , கணிதம் , சுற்றாடல், ஆங்கிலம்,நூலகம்-சித்திரம் |
| 6 | ச.றெஜிகா | தமிழ் , சமயம் , கணிதம் , சுற்றாடல், ஆங்கிலம்,நூலகம்-கட்டுரை |
| 7 | ச.அபிஸ்நயா | தமிழ் , சமயம் , கணிதம் , சுற்றாடல், ஆங்கிலம்,நூலகம்-கட்டுரை ,சாந்தையர் மடம்-சமயம்- சிறப்புத் தேர்ச்சி,English poem,ICT-வலய மட்டம் |
| 8 | சி.அபிதா | தமிழ்,சமயம்,கணிதம் , ஆங்கிலம், நூலகம்- சித்திரம் |
| 9 | வே.சார்மி | தமிழ் , சமயம்,ஆங்கிலம்,கணிதம் |
| 10 | நி.அஸ்வினி | கணிதம் |
| 11 | இ.றதுசிகா | சமயம் , கணிதம் , நூலகம்- சித்திரம் |
| 12 | அ.டிலக்ஷனி | சமயம் , கணிதம் |
| 13 | ஸ்.வினுஜா | சமயம்,ஆங்கிலம் |
| 14 | செ.பவுஜிகா | தமிழ் , சமயம் , கணிதம் , ஆங்கிலம், நூலகம்-கட்டுரை,சாந்தையர் மடம் -கோலம் |

**தரம் 5**

| | | |
|---|---|---|
| 1 | பி.கோபிராம் | தமிழ் , சமயம் , கணிதம் , சுற்றாடல்,புலமைப் பரிசில்-சித்தி |
| 2 | ச.ஆருசன் | இணைபாடம் |
| 3 | ந.பிரியங்கன் | தமிழ் , சமயம் , கணிதம் , சுற்றாடல், ஆங்கிலம், புலமைப் பரிசில்-சித்தி,சாந்தையர் மடம் -கோலம் |
| 4 | ரா.மேனகன் | தமிழ்,சுற்றாடல்,சமயம் |
| 5 | மா.ஜெனுசியன் | தமிழ் , சமயம் , கணிதம் , சுற்றாடல்,ஆங்கிலம், சாந்தையர் மடம் -கோலம் |
| 6 | இ.நிருசிகா | தமிழ் , சமயம் , கணிதம் , சுற்றாடல் ,ஆங்கிலம் |
| 7 | ச.ஜிஸ்னுகா | தமிழ் , சமயம் , கணிதம் , சுற்றாடல் ,ஆங்கிலம், புலமைப் பரிசில்-சித்தி |
| 8 | ச.சானுகா | தமிழ், சமயம் , கணிதம் , சுற்றாடல்,நூலகம்-கட்டுரை |
| 9 | அ.அபர்ணா | தமிழ் , சமயம் , கணிதம் , சுற்றாடல் ,ஆங்கிலம் |
| 10 | கு.சிந்தூரிஜா | தமிழ் , சமயம் , கணிதம் , சுற்றாடல், ஆங்கிலம் |
| 11 | ம.சகானா | தமிழ் , சமயம் , கணிதம் , சுற்றாடல் ,ஆங்கிலம் |
| 12 | ஜெ.பிருந்தா | தமிழ் ,சுற்றாடல்,ஆங்கிலம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தரம் 6**

| | | |
|---|---|---|
| 1 | ந.ஜெஸ்ரின் | சமயம்,விஞ்ஞானம்,வரலாறு,புவியியல்,சங்கீதம் |
| 2 | சி.சாரங்கன் | தமிழ்,கணிதம்,விஞ்ஞானம்,புவியியல்,குடியியல்,சங்கீதம |
| 3 | ம.ஜெயபரன் | இணைபாடம் |
| 4 | சோ.அபர்ணன் | தமிழ்,கணிதம்,விஞ்ஞானம்,புவியியல்,குடியியல்,சங்கீதம் |
| 5 | க.பிரணவராஜ் | தமிழ்,விஞ்ஞானம்,புவியியல்,குடியியல்,சங்கீதம் |
| 6 | நி.றதீபா | தமிழ்,சமயம்,கணிதம்,விஞ்ஞானம்,ஆங்கிலம்,வரலாறு புவியியல்,குடியியல்,சங்கீதம்,தொழில்நுட்பம் |
| 7 | து.சயிந்தா | தமிழ்,சமயம்,கணிதம்,விஞ்ஞானம்,ஆங்கிலம்,வரலாறு புவியியல்,குடியியல்,சங்கீதம்,தொழில்நுட்பம்,சுகாதாரம் |
| 8 | சி.டிலக்சனா | தமிழ்,சமயம்,கணிதம்,விஞ்ஞானம்,ஆங்கிலம்,வரலாறு புவியியல்,குடியியல்,சங்கீதம்,தொழில்நுட்பம் |
| 9 | ஜீ.டல்சிகா | தமிழ்,கணிதம்,விஞ்ஞானம்,குடியியல்,நடனம் |
| 10 | இ.அனுசா | இணைபாடம் |
| 11 | உ.கென்சிகா | கணிதம்,விஞ்ஞானம்,சங்கீதம் |
| 12 | அ.அபிநயா | தமிழ்,சமயம்,கணிதம்,விஞ்ஞானம், புவியியல்,குடியியல்,சங்கீதம்,தொழில்நுட்பம் |

**தரம் 7**

| | | |
|---|---|---|
| 1 | ஶ்ரீ.தரிசனன் | கணிதம்,விஞ்ஞானம்,குடியுரிமை,சங்கீதம்,தொழில்நுட்பம் |
| 2 | ச.சுபானுஜன் | இணைபாடம் |
| 3 | ச.கௌரிசன் | தமிழ் , சமயம் , ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், குடியுரிமை,சங்கீதம்,தொழில்நுட்பம்,சுகாதாரம் |
| 4 | செ.சுஜீபன் | தமிழ் , சமயம் , ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், புவியியல்,குடியுரிமை,சங்கீதம்,தொழில்நுட்பம்,சுகாதாரம் |
| 5 | அ.டில்றுக்ஷன் | கிறிஸ்தவம்,கணிதம்,விஞ்ஞானம்,குடியுரிமை,சங்கீதம்,தொழில்நுட்பம் |
| 6 | சு.அபிநயா | தமிழ் , சமயம் , ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், குடியுரிமை,நடனம்,தொழில்நுட்பம்,சுகாதாரம் |
| 7 | அ.அபினா | தமிழ் , சமயம் , ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், வரலாறு,குடியுரிமை,புவியியல்,நடனம்,தொழில்நுட்பம்,சுகாதாரம் |
| 8 | அ.சாருணி | தமிழ் ,சமயம் ,ஆங்கிலம் கணிதம்,விஞ்ஞானம்,புவியியல் குடியுரிமை,சங்கீதம்,தொழில்நுட்பம்,சுகாதாரம்,நூலகம்-கட்டுரை |

**தரம் 8**

| | | |
|---|---|---|
| 1 | ர.மிதுன் | இணைபாடம் |
| 2. | இ.றதுசன் | சங்கீதம் , தொழில்நுட்பம் |
| 3 | வே.சார்மிசன் | இணைபாடம் |
| 4 | ச.பிரசாந் | இணைபாடம் |
| 5 | செ.யதுர்சன் | தமிழ்,விஞ்ஞானம்,சங்கீதம்,தொழில்நுட்பம் |
| 6 | பா.மதுமிதா | சமயம் , தமிழ் , ஆங்கிலம் , விஞ்ஞானம் |
| 7 | பா.பர்சனா | தமிழ்,சமயம் ,விஞ்ஞானம்,கணிதம் ,வரலாறு,சங்கீதம், தொழில்நுட்பம் |
| 8 | லோ.வினோசியா | தமிழ்,சங்கீதம்,நூலகம்-கவிதை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 9 | யோ.சுபத்திரா | தமிழ்,சங்கீதம்,நூலகம்-கவிதை |
| 10 | சி.நிந்துஜா | தமிம், ,கணிதம்,குடியியல் ,விஞ்ஞானம், வரலாறு புவியியல்,நடனம் ,சுகாதாரம் , தொழில்நுட்பம் |
| 11 | சி.அபிசா | தமிழ் , சமயம் , கணிதம் , குடியியல் ,விஞ்ஞானம் , வரலாறு, புவியியல் , சங்கீதம் , சுகாதாரம் , தொழில்நுட்பம், நூலகம்-கட்டுரை |
| 12 | ம.ஜெனனி | தொழில்நுட்பம் |

## தரம் 9

| | | |
|---|---|---|
| 1 | ரா. ராகவன் | தமிழ் , சமயம் , கணிதம் ,விஞ்ஞானம் , வரலாறு, ஆங்கிலம் , புவியியல் , குடியியல் ,தொழில்நுட்பம் ,சங்கீதம் சுகாதாரம், நூலகம் - சுவரொட்டி |
| 2 | க.நிவேதன் | கணிதம் ,விஞ்ஞானம் , , ஆங்கிலம் ,தொழில்நுட்பம் சுகாதாரம் , |
| 3 | சோ.அபிசன் | சமயம் , கணிதம் ,விஞ்ஞானம் , ஆங்கிலம் , புவியியல் , குடியியல் ,தொழில்நுட்பம் , சுகாதாரம் , நூலகம் - சுவரொட்டி |
| 4 | க.சிறிகாந்தன் | விஞ்ஞானம், சங்கீதம், தொழில்நுட்பம் |
| 5 | ர.மகிந்தன் | இணைபாடம், நீளம் பாய்தல் மாகாணமட்டம் 1ம் இடம் |
| 6. | பா.சிந்துஜா | தமிழ் , சமயம் , கணிதம் ,விஞ்ஞானம் , வரலாறு, ஆங்கிலம் , புவியியல் , , குடியியல், தொழில்நுட்பம் ,நடனம் சுகாதாரம் , |
| 7 | பு.சிந்துசா | தமிழ் , சமயம் , தொழில்நுட்பம் ,சங்கீதம் |
| 8 | ச.சுலோசனா | தொழில்நுட்பம் |
| 9 | மா.மகிழினி | தமிழ் , சமயம் , ,விஞ்ஞானம் , ஆங்கிலம் , குடியியல், ,சங்கீதம் சுகாதாரம் |
| 10 | ந.ஜெஸ்னிகா | தமிழ் , சமயம் , கணிதம் ,விஞ்ஞானம் , வரலாறு, ஆங்கிலம் , புவியியல் , , குடியியல், தொழில்நுட்பம், சங்கீதம், சுகாதாரம் |

## தரம் 10

| | | |
|---|---|---|
| 1 | ச.சரண்ஜன் | சமயம், கணிதம், வணிகக்கல்வி, சங்கீதம் |
| 2 | ச.ரேணுஜன் | சங்கீதம் |
| 3 | ம.ஜெகதேதீஸ் | இணைபாடம் |
| 4 | பா.மதுஜன் | விஞ்ஞானம், ஆங்கிலம், சமயம் |
| 5 | சி.குசந்தன் | கணிதம்,விஞ்ஞானம் , ஆங்கிலம் , வணிகக்கல்வி,சுகாதாரம் சமயம், சங்கீதம், நூலகம் - கவிதை |
| 6 | சி.தாரகா | தமிழ் , சமயம் , கணிதம் ,விஞ்ஞானம் , வரலாறு, ஆங்கிலம் வணிகக்கல்வி சங்கீதம் சுகாதாரம் , நூலகம் - கவிதை |
| 7 | சு.கஜலக்சி | சங்கீதம் சுகாதாரம். நூலகம் - கவிதை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் 11

க.பொ.த உயர்தரம் கறகத் தகுதி பெற்றோர் விபரம் -2016

| இல | மாணவர்பெயர் |
|---|---|
| 1 | கலியுகராசா மதுசன் |
| 2 | பாலவேர்ணிகா பாலசிங்கம் |
| 3 | பிரிதா செந்தில்நாதன் |
| 4 | கிருத்திகா துரைசிங்கம் |

அமரர் அம்பலவாணர் தரம் 5 புலமைப் பரிசில் நிதி பெறுவோர்

| இல | சித்தி பெற்ற ஆண்டு | மாணவர் பெயர் |
|---|---|---|
| 1 | 2014 | செந்தில்நாதன் சுஜீவன் |
| 2 | 2016 | நடேசகுமார் பிரியங்கன் |
| 3 | 2016 | பிறேமச்சந்திரன் கோபிராம் |
| 4 | 2016 | ஜிஸ்னுகா சர்வா |

பேராசிரியர் கோபன் மகாதேவா அமரர் வைத்தியை சீதா தேவி புலமைப் பரிசில் நிதி பெறுவோர்

| இல | மாணவர் பெயர் | தரம் |
|---|---|---|
| 1 | கலியுகராசா மதுசன் | உயர் தரம் -வணிகம் |
| 2 | கிருத்திகா துரைராசா | உயர் தரம் -கலை |
| 3 | பாலவேர்ணிகா பாலசிங்கம் | உயர் தரம் -கலை |
| 4 | பிரிதா செந்தில்நாதன் | உயர் தரம் -கலை |

திரு.செல்லத்துரை தவரட்ணம் புலமைப்பரிசில் நிதி பெறுவோர் விபரம்

| இல | மாணவர் பெயர் | தரம் |
|---|---|---|
| 1 | மாயராசா ஜெனுசியன் | 6 (வகுப்பறை சிறந்தவெளிப்பாடு) |
| 2 | நிருஷி இராஜேந்திரன் | 6 (வகுப்பறை சிறந்தவெளிப்பாடு) |
| 3 | சகானா மதிவதனன் | 6 (வகுப்பறை சிறந்தவெளிப்பாடு) |
| 4 | சாருணி அருமைநாயகம் | 8 (வகுப்பறை சிறந்தவெளிப்பாடு) |
| 5 | அபிநயா சுப்பிரமணியம் | 8 (வகுப்பறை சிறந்தவெளிப்பாடு) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2017 ஆம் ஆண்டில் மாகாண மட்டபோட்டிகளில் பங்கு பற்றி வெற்றி பெற்றோர்

| இல | மாணவர் பெயர் | தரம் | நிகழ்வு |
|---|---|---|---|
| 1 | செல்வி அபிஸ்னயா சர்மிலன் | 5 | எழுத்தாக்கம் - தமிழ்தினப்போட்டி வலயமட்டம் -1ம்இடம் மாகாணமட்டம் -2ம் இடம்.ஆங்கிலதினப் போட்டி - வலயமட்டம் -1ம்இடம் மாகாணமட்டப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார் |
| 2. | செல்வன்.கலியுகராசா மதுசன் | | சமூகவிஞ்ஞானப்போட்டி – 2012,2013,2014,வலயம்,மாகாணம்,தேசியம் |
| 3. | செல்வி.சிந்துஜா பாஸ்கரன் | | 2012 1ம்இடம் 10 வயது 100M ஓட்டம் வலயம்,மாவட்டம் மட்டம். |
| 4. | செல்வன்.ஜெனுசிகன் | | நீளம் பாய்தல் 1ம்இடம் வலயமட்டம் யாழ்மாவட்டம் 1ம்இடம் (யாழ்மாவட்ட மெய்வன்மைச் சங்கம்) |
| 5 | செல்வன் ரவீந்திரபிரசாத் மகிந்தன் | | நீளம் பாய்தல்- வலயமட்டம் 1ம்இடம் - மாகாணமட்டம் -1ம்இடம் உயரம் பாய்தல்- வலயமட்டம் 1ம்இடம் - மாகாணமட்டம் -1ம்இடம் 200M ஓட்டம் வலயமட்டம் 2ம்இடம் |



எப்போதும் பொறாமையை விலக்குங்கள். இதுவரையிலும் நீங்கள் செய்யாத மகத்தான காரியங்களை எல்லாம் செய்து முடிப்பீர்கள்.

தன்னலம் சிறிதும் இல்லாமல், நிறைந்த அன்புடன் பழகுபவர்களே இப்போது உலகத்திற்குத் தேவைப்படுகிறார்கள்.

**-சுவாமி விவேகானந்தர்-**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1. உனக்குத் தேவையான எல்லா வலிமையும், உதவியும் உனக்குள்ளேயே உள்ளன.
2. உடல் பலவீனத்தையோ, மன பலவீனத்தையோ உண்டாக்கும் எதையும் அணுகக் கூடாது.
3. உன்னை நீயே பலவீனன் என்று நினைத்துக் கொள்வது மிகப் பெரிய பாவம்.
4. பலவீனம் இடையறாத சித்ரவதையாகவும் துன்பமாகவும் அமைகிறது.
5. செயல் நன்று, சிந்தித்து செயலாற்றுவதே நன்று. உனது மனதை உயர்ந்த லட்சியங்களாலும், சிந்தனைகளாலும் நிரப்பு. அவற்றை ஒவ்வொரு நாளின் பகலிலும் இரவிலும் உன் முன் நிறுத்து அதிலிருந்து நல் செயல்கள் விளையும்.
6. சுயநலமின்மை, சுயநலம் என்பவற்றைத் தவிர, கடவுளுக்கும் சாத்தானுக்கும் எவ்வித வேறுபாடும் இல்லை.
7. நீ எதை நினைக்கிறாயோ அதுவாக ஆகிறாய் உன்னை வலிமை உடையவன் என்று நினைத்தால் வலிமை படைத்தவன் ஆவாய்! (ஆனால் முயற்சி தேவை)
8. நான் இப்போது இருக்கும் நிலைக்கு நானே பொறுப்பு
9. சோம்பேறித்தனத்தை எந்த வழியிலும் துரத்தியாக வேண்டும். சுறுசுறுப்பு என்பதற்கு எதிர்ப்பது என்பது பொருள்.
10. பகை, பொறாமை ஆகியவற்றை நீ வெளியிட்டால், அவை வட்டியும் முதலுமாக மீண்டும் உன்னிடமே திரும்பி வந்து சேர்ந்துவிடும்.

**-சுவாமி விவேகானந்தர்-**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக் கீதம்

கைதடி நுணாவில் வித்தியசாலை
சீருடன் வாழியவே
கைதடி நுணாவில் கலங்கரை விளக்காய்
கலையகம் வாழியவே

(கைதடி நுணாவில் )

பத்தொன்பதாம் நூற்றாண்டதில் மலர்ந்து
பலர் மகிழக் கல்வி கலை வளர்த்து
சித்தி தரும் அறிவு வீரம் செல்வம் யாவும்
முத்தென நல்கும் அறிவாலயம் எங்கள்

(கைதடி நுணாவில் )

சமயம் கணிதம் தமிழ் ஆங்கிலம் விஞ்ஞானம்
புவியியல் அழகியல் மனையியல் குடியியல்
விவசாயம் வரலாறு தொழில்நுட்பம் சுகாதாரம்
விளையாட்டிலும் வெற்றி மேம்படச் செய்திடும்

(கைதடி நுணாவில் )

பண்பொடு பழக்கமும் பல நமக்களித்து
அன்பொடு அருளும் ஒழுக்கமும் ஊட்டி
மண்மிசை மக்களின் மதிப்பினைச் சேர்த்திங்கே
இன்புடையோராய் இனிதெமை ஆக்கிடும்

(கைதடி நுணாவில் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org